www.tamilarangam.net

பெப்ரவரி 7, 2005
அதி மேதகு போல் மார்ட்டின்
கனேடியப் பிரதம மந்திரி
பிரதம மந்திரி காரியாலயம்
80 வெலிங்டன் வீதி
ஒட்டாவா, ஒன்டாரியோ
K1A 0A2

அன்புள்ள பிரதம மந்திரி மார்டின் அவர்கட்கு:

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் (புலிகள் இயக்கம்) சிறார்கள் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பாகவே ஹியூமன் றைட்ஸ் வொட்ச் அமைப்பின் (மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு) சார்பில் இக்கடிதத்தை நாம் வரைகின்றோம். மிக முக்கியமான இவ்விடயம் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்வதற்காக கிடைக்கும் இச்சந்தர்ப்பத்தையிட்டு எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, கீழே விபரிக்கப்பட்டுள்ள சிபார்சுகள் தொடர்பாக உங்கள் காரியாலயத்துடனான சந்திப்பொன்றில் கலந்துரையாடுவதற்கான ஒழுங்குகளைச் செய்து தரும்படி பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நீங்கள் அண்மையில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்பாக, புலிகள் இயக்கமானது சிறார்களைப் படைகளில் சேர்த்துக் கொள்ளும் விடயம் தொடர்பாக பகிரங்கமாக விடுத்த அறிக்கையில் "இது போன்றதொரு விடயம் உலகளாவிய ரீதியில் கண்டனத்திற்க்கு உள்ளாக்கப்பட வேண்டியதாகும்" என வெளியிட்ட கருத்தையும், இவ்விடயம் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான (TNA) சந்திப்பில் பிரஸ்தாபிப்பதற்கு நீங்கள் காண்பித்த அக்கறையையும், ஹியூமன் றைட்ஸ் வொட்ச் அமைப்பு மிகவும் வரவேற்கிறது. கனேடிய அரசாங்கமானது சிறார்கள் படையினராகப் பாவிக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராக போராடுவது என்னும் விடயத்திற்கு நீண்ட காலமாக முன்னுரிமை கொடுத்து வருவதையும், ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தப்படும் சிறார்களின் உரிமை தொடர்பான சட்டத்தின் மேலதிக சரத்தை மிக முன்னதாகவே ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கியது மட்டுமன்றி அதில் விபரிக்கப்பட்டுள்ளதற்கு அமைய, பதினைந்து வயதிற்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவது ஓர் யுத்தக் குற்றமாக அடையாளப்படுத்துகின்ற சர்வதேச குற்றவியல் நீதிமன்றச் சாசனத்தை வரைவதில் கனடா வகித்த முன்னணிப் பாத்திரத்தையும் நாம் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுகிறோம்.

ஆயுத மோதல்களின் காரணமாக பாதிப்புக்கு உள்ளான சிறார்கள் தொடர்பான யுனிசெப் அமைப்பின் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகின்ற வகையில் 2.2 மில்லியன் டொலர்கள் உட்பட, இலங்கையில் மோதல்களின் காரணமாக பாதிப்புக்கு உள்ளான சிறார்கள் தொடர்பான பணிகளுக்கு சீடா (CIDA) நிறுவனத்திற்கூடாக கனடா நிதி வளங்களை கொடுத்து வந்துள்ளது என்பதையும் நாம் கவனத்தில் கொள்கின்றோம். அத்துடன் சிறார் படையினரை விடுவிப்பது மற்றும் அவர்களை குடும்பங்களோடு மீள் இணைப்பது உட்பட, மிக அபாயகரமான சூழ்நிலைகளுக்குள் தள்ளப்பட்டுள்ள சிறார்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் எனப் பணியாற்றுகின்ற உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவுவதற்காக 4 மில்லியன் டொலர்களை வழங்கி இருப்பதையும் நாம் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

இலங்கைக்கு வெளியே, உலகெங்கும் வாழுகின்ற இலங்கைத் தமிழர்களில் மிகப் பெரிய சனத்தொகையினரின் வாழ்விடமாக கனடா விளங்குவதனால், இலங்கையில் சிறார்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, பயன்படுத்தப்படுகின்ற பிரச்சினை தொடர்பாக ஒரு

www.tamilarangam.net

தனித்துவமானதும் தாக்கமானதுமான பாத்திரத்தை கனடா வகிக்க முடியும் என்று நாம் நம்புகின்றோம்.

பதினைந்து வயதிற்கும் குறைந்த சிறார்கள் உட்பட, சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை பயன்படுத்துவது தொடர்பான புலிகள் இயக்கத்தின் நடவடிக்கையானது இதுவரை மிக விரிவாகவும் விபரமாகவும் ஆவணப் படுத்தப்பட்டுள்ளது. புலிகள் இயக்கமானது சிறார்களை பிடித்து தமது படையினராக பயன்படுத்துவது தொடர்பாக ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பானது 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சுயாதீனமான விசாரணையினை மேற்கொண்டது. ***அச்சத்திற்குள் வாழ்தல் : இலங்கையில் சிறார் படையினரும் புலிகள் இயக்கமும்*** என்ற தலைப்பில் 2004ம் ஆண்டு நொவெம்பர் மாதம் வெளியிடப்பட்ட எமது அறிக்கையானது, புலிகள் இயக்கம் தமது இராணுவத்தில் பணியாற்றுவதற்காக, இலங்கையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் குடும்பங்கள் தமது பிள்ளைகளை கொடுக்க வேண்டும் என வலியுறுத்துவதற்கு எவ்வாறு அவர்கள் மீது அச்சுறுத்தல்களையும், அழுத்தங்களையும், பலவந்தப் படுத்தல்களையும் பிரயோகிக்கின்றது என்பதை பல முன்னாள் சிறார் போராளிகள் தெளிவாக விபரிக்கின்ற வாக்கு மூலங்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இக் குடும்பங்கள் தமது பிள்ளைகளை வழங்க மறுக்கின்ற பட்சத்தில் புலிகள் இயக்கமானது இரவு நேரங்களில் அச்சிறார்களை அவர்களின் வீடுகளில் இருந்து பலவந்தமாக கடத்தி செல்லுதல், மற்றும் அவர்கள் பாடசாலைக்கு போகும் வழியில் பலவந்தமாக கொண்டு செல்லுதல் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றது.

மோதல் தவிர்ப்பு நிலைமைக்கு முன்னர் சிறார்கள் தொடர்ச்சியாகவே மோதல்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 1990ம் ஆண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கற்கை ஆய்வுகளின்படி சண்டைகளில் இறந்துபோன புலிகள் இயக்க படையினரில் 40-60 வீதமானோர் 18 வயதிற்கும் குறைந்த சிறார்களே என்பது தெரிய வந்துள்ளது. மிக அண்மையிலும் கூட, 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புலிகள் இயக்கத்தின் பிரதானமான ''வன்னி'' பிரிவினருக்கும் அதில் இருந்து பிரிந்து சென்ற கிழக்கு தளபதியின் தலைமையிலான குழுவினருக்கும் இடையே நடந்த மிக குறுகிய ஆனால் அகோரமான மோதல்களின் போது கொல்லப்பட்ட சிறார்களின் தொகை கணக்கிடப்பட முடியாததாகவே உள்ளது.

புலிகள் இயக்கமானது, சிறார்களை படைகளில் சேர்க்கும் விடயம் தொடர்பான புள்ளி விபரங்களை விரிவாக சேகரிக்கவென்றே தனியாக பேணப்படும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) ஆவண தொகுப்பின் மூலமும் ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பினால் திரட்டப்பட்டுள்ள விபரங்கள் மேலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 2004ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கு இடைப்பட்ட மோதல் தவிர்ப்பு காலத்தில் மட்டும், புலிகள் இயக்கமானது சிறார்களை பிடித்துச் சென்ற சுமார் 3,600 சம்பவங்களை யுனிசெப் அமைப்பு ஆவணப்படுத்தியுள்ளது. கடந்த மூன்று வருட காலத்தில் யுனிசெப் அமைப்பினால் ஆவணப் படுத்தப்பட்டுள்ள இச்சிறார் படையினர் தொடர்பான சம்பவங்களில், 937 சம்பவங்கள் 15 வயதிற்கு குறைந்த சிறார்கள் பற்றியவையாகும்.

நோர்வே அரசாங்கத்தின் தலைமையில் மோதல் தவிர்ப்பை கண்காணிப்பதற்கென அமைக்கப்பட்ட சிறீ லங்கா கண்காணிப்பு குழு (SLMM) என்னும் சர்வதேச அமைப்பும் புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டமை தொடர்பான சம்பவங்களை ஆவணப்படுத்தி உள்ளது. 2002ம் ஆண்டு பெப்ரவரி 1ம் திகதிக்கும் 2004ம் ஆண்டு நொவம்பர் 30ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் பிடித்துச் செல்லப்பட்ட 1,851 முறைப்பாடுகள் சிறீ லங்கா கண்காணிப்பு

www.tamilarangam.net

குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் 1,490 முறைப்பாடுகள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்த மீறல் சம்பவங்கள் என அது உறுதிப் படுத்தியுள்ளது.

ஆனால் மிகவும் மனம் வருந்தத்தக்க விடயம் யாதெனில், கடந்த டிசம்பர் 26ம் திகதி நிகழ்ந்த சுனாமிப் பேரழிவின் பின்னரும் கூட, புலிகள் இயக்கத்தினால் சிறார்களை பிடித்து செல்லும் நடவடிக்கையானது முடிவுக்கு வரவில்லை என்பதாகும். இப் பேரழிவு நிகழ்ந்து முடிந்ததில் இருந்து ஜனவரி 26ம் திகதி வரையான காலத்தில் மாத்திரம் புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் பிடித்துச் செல்லப்பட்ட 40 சம்பவங்களை யுனிசெப் அமைப்பு பதிவு செய்துள்ளது. இவற்றில் பல சுனாமிப் பேரழிவில் இருந்து உயிர் தப்பியவர்களுக்காக அமைக்கப்பட்ட நிவாரண முகாம்களில் இருந்து சிறார்கள் பிடித்துச் செல்லப்பட்ட சம்பவங்களாகும். மேலே குறிப்பிடப்பட்ட திகதி வரை இவ்வாறு கொண்டுசெல்லப்பட்ட சிறார்களின் உண்மையான தொகை இதைவிட அதிகமாக இருக்கலாம் என்றே கருதப்படுகின்றது. தற்போது இப்பிரதேசங்களில் சர்வதேச பணியாளர்கள் பிரசன்மாக இருப்பதானது புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் பிடித்துச் செல்லப்படுவதற்கு சற்று இடைஞ்சலாக இருப்பதாக உள்ளூர் நிவாரண பணியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். அதேவேளை இவ் வெளிநாட்டு பணியாளர்கள் அங்கிருந்து வெளியேறியதும் மீண்டும் சிறார்களை பிடித்துச் செல்லுதல் அதிகரிக்கலாம் என்னும் தமது அச்சத்தையும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புலிகள் இயக்கத்திற்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெரும் ஆதரவை வழங்குபவர்களாகவும், “தரும” ஸ்தாபனங்களுக்கு ஊடாக அடிக்கடி பெருந்தொகையான நிதியை வழங்குபவர்களாகவும் பாரிய கனேடிய தமிழ் சமூகம் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். வருடம் ஒன்றுக்கு ஒரு மில்லியன் டொலர் முதல் 22 மில்லியன் டொலர்கள் வரையாக வழங்கப்படும் இப் பெருந்தொகை நிதி ஆதரவினை சரியாக கணக்கிடுவது என்பதும் கூட மிகவும் சிரமமானதொரு காரியமாகவே இருக்கின்றது. இந்நிதி ஆதரவின் சரியான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவாக இருப்பினும், இக்கனேடிய தமிழ் சமூகத்தினரிடம் மேற்கொள்ளப்படும் குறிப்பான இப்பாரிய நிதி திரட்டலானது, புலிகள் இயக்கத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைக்கு மிக உந்துதலாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு நிதி திரட்டலில் ஈடுபட்டிருக்கும் மிக முக்கியமான அமைப்பாக புலிகள் இயக்கத்தோடு தொடர்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) விளங்குவதோடு, அது புலிகள் இயக்கத்தின் மனிதாபிமான பிரிவாகவும் பணியாற்றுகின்றது. தற்போது கனடாவில் தர்ம ஸ்தாபனத்திற்கு உரிய அந்தஸ்து தனக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அது கோரிக்கை விடுத்துள்ளது. ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகள் பலர் புலிகள் இயக்கத்தின் முன்னாள் படையினராக இருப்பதை உதாரணமாக சுட்டிக்காட்டி, புலிகள் இயக்கத்திற்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் இடையேயான நெருக்கமான தொடர்பு பற்றி பல நம்பகரமான உள்ளூர் அமைப்புக்கள் தமது அக்கறையை வெளிப்படுத்தின. சுனாமிப் பேரழிவின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படும் நிவாரணப் பணிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகின்ற விதத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது புலிகள் இயக்கத்தோடு கூட்டாக செயற்படுவதாகவும் இந் நம்பத்தகுந்த வட்டாரங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளன. அது மட்டுமன்றி மிக அந்தரித்துப் போன நிலையில் உள்ள இம்மக்கள் பிரிவினரை புலிகள் இயக்கத்தின் கண்காணிப்புக்குள் கொண்டு வருவதற்கும், நபர்களை படைகளில் சேர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கக்கூடிய வகையில் இடம் பெயர்ந்த மக்களுக்காக அமைக்கப்பட்ட நிவாரண முகாம்களை புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு செல்லும் நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

www.tamilarangam.net

பெருந்தொகையான இலங்கைத் தமிழர்கள் எமது நாட்டில் வாழ்வதும், இலங்கையுடன் எமது நாட்டிற்குள்ள உறவும், புலிகள் இயக்கமானது சிறார்களை தொடர்ந்தும் படைகளில் சேர்த்துக் கொள்வது தொடர்பான விடயத்தில் கனடா தலையிடுவதற்கான சிறப்பானதொரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுக்கும்படி நாம் கோருகின்றோம்:

1. புலிகள் இயக்கமானது சிறார்களை படைகளில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும், அத்தோடு தற்போது அவர்களின் படையணிகளில் உள்ள சிறார்களை விடுவிக்க வேண்டும் என்றும் கோருகின்ற பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிடல் வேண்டும். மேலும் புலிகள் இயக்கத்தின் மனிதாபிமான பிரிவான தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது தமிழ்ப் பகுதிகளில் உள்ள நிவாரணப் பணிகள், முகாம்கள் மற்றும் அநாதை இல்லங்கள் என்பவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மேற்கொள்ளும் முயற்சிகளை முடிவுக்கு கொண்டுவருவதோடு, பக்க சார்பற்ற உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் எவ்வித தங்கு தடையுமின்றி தமது பணிகளை மேற்கொள்வதற்கு இடமளிக்க வேண்டும் என்றும் அவர்களைக் கோர வேண்டும்.

2. அண்மையில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் ஆயுத மோதல்களும் சிறார்களும் பற்றிய விவாதத்தினை பாவித்து (தற்போது பெப்ரவரி 23ம் திகதி நடத்தப்பட தீர்மானிக்கப் பட்டுள்ளது) புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதை கண்டிப்பதோடு, தற்போது அவர்களின் படையணிகளில் உள்ள சகல சிறார்களையும் விடுவிக்க வேண்டும் என்றும் கோர வேண்டும்.

3. சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள நிவாரண முகாம்கள் மற்றும் அனாதை இல்லங்கள் உட்பட புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் பிடிக்கப்படக்கூடிய, மற்றும் அவர்களின் ஏனைய அத்து மீறல்களுக்கும் உள்ளாகக் கூடிய பிரதேசங்களில், சீடா (CIDA) அமைப்பின் ஆதரவில் சிறார்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் படைகளில் சேர்க்கப்படாமல் இருப்பதை தடுக்க கூடிய வழிவகைகள் உள்ளடக்கப்பட்ட வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

4. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சாசனத்தில் கையெழுத்திட வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்துகின்ற சட்டங்களை வரைவதற்கு தொழிநுட்ப ரீதியிலான ஒத்தாசைகளையும் வழங்க வேண்டும்.

5. எதிர்காலத்தில் நடத்தப்படக்கூடிய எந்தவிதமான சமாதான நடவடிக்கைகளின் போதும், அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது உறுதிப்படுத்தப் படுவதை மிக முக்கியமான ஒரு அம்சமாக கொள்ள வேண்டும் என, இலங்கை அரசாங்கத்தையும் புலிகள் இயக்கத்தையும் வலியுறுத்த வேண்டும்.

மேற்சொன்ன நடவடிக்கைகளாவன, புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் அவர்களின் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவரச் செய்வதற்கும் பயனுள்ளவையாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

இவ்விடயம் தொடர்பாக எமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு ஹியூமன் றைட்ஸ் வொச் நன்றி தெரிவிக்கிறது. டொரன்டோவில்

www.tamilarangam.net

அமைந்துள்ள எமது காரியாலயப் பணிப்பாளர் ஜெஸ்மின் ஹேர்ல்ட் மற்றும் ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பின் சிறார்கள் உரிமை தொடர்பான நியாயப் பிரச்சாரப் பணிப்பாளர் ஜோ பேக்கர் ஆகியோர் இம் முக்கியமான விடயம் தொடர்பான மேலதிக விடயங்களை உங்களுடன் கலந்துரையாட உள்ளனர். 416-322-8448 என்னும் இலக்கத்தின் மூலம் நீங்கள் ஜெஸ்மின் ஹேர்ல்ட் உடன் தொடர்பு கொள்ளலாம்.

இது தொடர்பான தங்கள் கவனத்திற்கு மிக்க நன்றி.

தங்கள் உண்மையுள்ள,

| | | |
|---|---|---|
| Lloyd Axworthy | Jasmine Herlt | Noah Novogrodsky |
| Human Rights Watch | Director | Advocacy Co-Chair |
| Board of Directors | Toronto Office | HRW Toronto Committee |

cc Hon. Pierre Pettigrew
Hon. Bill Graham
Mr. John Cannis
Mr. Wajid Khan
Hon. Jim Karygiannis
Mr. Jack Layton
Hon. John McKay
Hon. Dan McTeague
Ms. Carolyn Parrish
Mr. Thomas Wappel

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்